Volume: 07 Issue: 03 July to September 2025 www.irjtsjournal.org

# களவழி நாற்பதில் போர்க்களத்தில் யானைகள்– ஓர் ஆய்வு

சுதாகரன் விதுர்சியா
*தமிழ் கற்கைகள் துறை*
*கலை கலாசார பீடம், கிழக்கு பல்கலைக்கழகம்*

**ஆய்வுச் சுருக்கம்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் நிகழ்ச்சியாகிய போர்ச்செய்தி பற்றிக் கூறும் ஒரே நூல் களவழி நாற்பது ஆகும். ஒரு தோல்வியின் காரணமாகவும் ஒரு வெற்றியின் விளைவாகவும் இந்நூல் எழுந்ததுஎனலாம். இதை எழுதியவர் பொய்கையார் என்னும் புலவர். இவர் சேரமான் கணைக்கால் இரும்பொறையின் நண்பன் ஆவார். ''சோழன் செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் போர் புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்காலிரும்பொறையைப் பற்றிக் கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடி வீடு கொண்ட களவழி நாற்பது'' என்று பொய்கையார் இந்நூலைப் பாடியதற்கான காரணத்தை எடுத்துக்கூறும் பழைய குறிப்பு ஒன்றுள்ளது. இத்தொடரிலிருந்து சோழன் செங்கணான் சேரமான் இரும்பொறையோடு போரிட்டு வெற்றி பெற்று சேரனை சிறையிலடைத்தான் என்பதும் அப்பொழுது பொய்கையார் என்னும் பெரும் புலவர் சோழனது வெற்றியைப் புகழ்ந்து பாடி அவனை (சேரனை) சிறையிலிருந்து விடுதலை செய்ய உதவினர் என்பதும் தெரியவருகின்றன. இவ்வரலாற்றுக் குறிப்பினை பிற்காலத்தில் வெளிவந்த கலிங்கத்துப்பரணி, மூவருலா, தமிழ்விடு தூது போன்ற நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

''நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன் கால் தளையை விட்டகோன்''

என்கிறது மூவருலா.

''களவழிக் கவிதை பொய்கை உரை செய்ய உதியன் காழ்வழித் தளையை
வெட்டி அரசு இட்ட அவனும்''

என்கிறது கலிங்கத்துப்பரணி.இந்நூலில் போர்க்களக் காட்சிகளை உவமை வாயிலாக ஆசிரியர் விளக்கும் பாங்கு மிக அருமையானதாகும். இந்நூலில் நாற்படைகள் பற்றிய செய்திள் இடம் பெறினும் யானைப்போரைப்பற்றிய செய்திகளே மிகுதியாக உள்ளன. போர்களத்தில் திரும்பும் திசைகளெல்லாம் யானைகளே நடமாடுகின்றன. அவ்வாறாக போர்க்களத்தில் நிரம்பியிருக்கும் யானைகளின் வெற்றிச் செயல்களும் யானைகளின் வீழ்ந்து கிடக்கும் காட்சிகளும் புலவரினால் தத்துரூபமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவற்றை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**அறிமுகம்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் நூலாக அமைந்த களவழி நாற்பது பொய்கையாரால் பாடப்பட்டதாகும். ஏர்க்களம் பற்றியும் போர்க்களம் பற்றியும் பாடப்படும் பாடல்கள் களவழி எனப்படும் என்று தொல்காப்பியர்,

''ஏரோர் களவழி அன்றே களவழி தேரோர் தோறடறிய வென்றியும்''

என்று புறத்திணை இயலைச் சார்ந்த வாகைத்திணையில் கூறியுள்ளார். இவற்றுள் முன்னது உழவர் விழையும் காலத்து களத்தின் கண் செய்யும் செயல்கள் ஆகும். பின்னர் கூறிய போர்க்கள வழிச்செய்திகளை புலவர் தேரேறி வந்து பாடுவர் என்பர்.

களத்து என்று முடிவதனாலும் போர்க்கள நிகழ்ச்சிகளை சிறப்பித்துக் கூறியுள்ளமையினாலும் பாடல் தொகை நாற்பது என்ற அளவினாலும் ‘களவழி நாற்பது’ என்ற பெயர் வந்தது. மேலும் பிற்கால நூல்கள் போர்க்களத்தை வர்ணித்து எழுதுவதற்கு இந்நூலே வழிகாட்டியாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. அந்தவகையில் களவழி நாற்பதில் போர்க்களத்தில் நிரம்பியிருக்கும் யானைகளின் வெற்றியினையும் அவற்றின் வீழ்ச்சியினையும் எடுத்துரைப்பதை நோக்காக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**களவழி நாற்பதில் போர்க்களத்தில் யானைகள்**

சோழன் செங்கணானுக்கும் சேரன் கணைக்காலிரும்பொறைக்கும் இடம்பெற்ற போரில் சோழனின் வெற்றியைப் பாடும்முகமாகவும் சேரனை விடுவிக்கும் முகமாகவும் பாடப்பட்ட நூல் களவழி நாற்பது ஆகும். அநேகமான பாடல்களில் போர்க்களக் காட்சிகளையும் போர்க்களத்தில் நிரம்பியிருக்கும் யானைகளின் செயல்களையும் விபரிப்பதனூடாக அக்காலத்தில் சேர, சோழ படைகளில் அதிகளவாக யானைகள் பயன்படுத்தப்பட்ட செய்தி தெரியவருகிறது.

**போர்க்களத்தில் யானைப்படையின் வெற்றிச் சிறப்புக்கள்**

காலையில் இடம்பெற்ற போரில் வீழ்த்தப்பட்ட பகைவருடைய இரத்தத்தை யானைகளின் கால்கள் கலக்கியதால் முற்பகலில் சேறாகவும் பிற்பகலில் வெயிலில் காய்ந்து யானைகளால் தூளாக்கிப் பவளப் புழுதி போல் மாறி வானெங்கும் பரவியது. இதன் மூலம் காலை மற்றும் மாலை பொழுதுகளில் போர் இடம்பெறும் என்பதை இதன்வழி அறிய முடிகின்றது. இதனையேபின்வரும் பாடல் வெளிப்படுத்துகின்றது.

முற்பகல் எல்லாம் குழம்பு ஆகி பிற்பகல்
துப்புத் துகளின் கெழூஉம் புனல் நாடன்
தப்பியார் அட்ட களத்து…(களவழி.1)

மற்றுமொரு பாடலில் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் யானையானது தேரினை சிதைத்து அத்தேர்ச் சக்கரத்தை தூக்கி நிற்கும் காட்சியானது வானில் சூரியன் மாலைப்பொழுதில் மறையும் மலையைச் போன்று காட்சியளித்தது என்பதை,

“உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பருதி சுமந்தெழுந்த யானை….”(களவழி.4)

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியலாம். போர்களத்தில் எவ்விடத்தும் யானைகள் பாய்வதால் அவ் யானைகள் புகுந்த இடங்களெல்லாம் குடைகளும் பிணங்களும் சிதறிக் கிடந்த காட்சியானது தச்சுச்த் தொழில் செய்பவனின் இடம் போன்று காட்சியளித்ததாக கூறப்பட்டுள்ளது. (களவழி.15) போர்க்களத்தில் யானைகள் யானைகளுடன் மோதுவதானது மலை மலையுடன் மோதுவதைப் போன்று காட்சியளித்தது. (களவழி.25) இவ்வாறாக யானைப்படையின் போர்ச்சிறப்புக்கள் களவழி நாற்பதில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**போர்க்களத்தில் வீழ்த்தப்பட்ட யானைகள்**


© 2025, IRJTSR

களவழி நாற்பதில் யானைப்படைகளின் வெற்றியைக் காட்டிலும் யானைகள் வீழ்த்தப்பட்ட காட்சிகளே அதிகம் சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில்போர்க்களத்தில் தரையில் வீழ்ந்து கிடக்கும் யானையின் கீழே அகப்பட்ட மூடுதுணி இல்லாத போர் முரசினுள் யானையின் இரத்தம் புகுந்து வெளியே வரும் காட்சியானது, மழைநீர் நிரம்பிய குளத்தின் கரையில் கீழேயுள்ள மதகுகள் தண்ணீரைசிறிது சிறிதாக உமிழ்வது போல காணப்பட்டதாக பொய்கையார் அழகிய உவமையினூடாக எடுத்தியம்பியுள்ளார். இதனை,

“ஞாட்பினுள் எஞ்சிய ஞாலம்சேர் யானைக்கீழ்
போர்ப்பில் இடிமுரசின் ஊடுபோம் ஒண்குருதி
கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் டீகாட்டுக் கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனல்நாடன்
ஆர்த்தமர் அட்ட களத்து.” (களவழி.2)

என்னும் பாடல் வெளிப்படுத்துகின்றது. வீழ்த்தப்பட்டவர்களில் உயிர் தப்பிய வீரர்கள் போர்க்களத்தில் நிரம்பியிருந்த இரத்தத்தினால் நடக்க முடியாமல் வெட்டப்பட்ட யானைகளின் தந்தங்களை ஊன்றுகோளாகக் கொண்டு எழுந்ததை பார்க்க முடிகிறது. இதன் மூலம் சேரனுடைய போர் யானைகள் அதிகமாக வீழ்த்தப்பட்ட செய்தி புலனாகிறது.(களவழி.3) மேலும் இப்போர்க்களத்திலே வீழ்த்தப்பட்டு அடுக்கப்பட்ட யானைகளானது வானத்தினின்று இடி வீழ்ந்து எவ்விடத்திற்கும் சிதறிக் கிடக்கும் மலைகள் போன்று தோற்றமளித்ததாக கூறப்படுகிறது.இதனையே,

“நால் நால் திசையும் பிணம் பிறக்க யானை
அடுக்குபு பெற்றிக் கிடந்த - இடித்து உரறி
அம்கண் விசும்பின் உரும் எறிந்து எங்கும்
பெரு மலை தூவ எறிந்தற்றே….”(களவழி.6)

என்னும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றது. மேலும் இப் போர்க்களத்தில் கருமலையையொத்த யானைககள், போரிட்டு இரத்தக் குளியல் நடத்தியதால் சிவந்த பட்டுச் சாதுலிங்க மலையைப் போன்று காட்சியளித்தன.(களவழி.7) யானைகள் மேல் யானைகள் சாய, மகளிரின் கண்களையொத்த அம்புகள் யானையின் மீது எல்லா இடத்துக்கும் பாய்ந்து அவற்றின் உடலை மறைத்ததால் மலைகளில் குருவிக்கூட்டங்கள் அளவின்றி மொய்த்திருப்பதைப் போலக் காட்சியளித்தது என்கிறது களவழி நாற்பது. இதற்கு பின்வரும் வரிகள் சான்று பகர்கின்றன.

“யானை மேல் யானை நெரிதர ஆனாது கண் நேர் கடும் கணை
மெய்ம் மாய்ப்ப - எவ்வாயும்
எண்ண அருங் குன்றில் குரீஇ இனம் போன்றனவே….”(களவழி.8)

இதேபோன்றதொரு காட்சியை சீவகசிந்தாமணியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

“கருவியூ டுளங் கழித்து கணை மெய்ப்பக் கதஞ்சிறந்து
குருவிசேர் வரைபோன்ற குஞ்சரம்” (சீவக.சி.2237)

அடுத்து பகைவரை கொன்ற போர்க்களத்தில் பல அம்புகள் எல்லா இடத்திலும் பாய்ந்ததனால் தளர்வடைந்து வருந்தும் யானைகள் எல்லாம் தொன்று தொட்டு வரும் சிறப்பினை உடைய தாது மலை போல காட்சி அளித்தன என குறிப்பிடுகின்றார் பொய்கையார். இதனை பின்வரும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன.

“பல் கணை எவ் வாயும் பாய்தலின் செல்கலாது
ஒல்கி உயங்கும் களிறு எல்லாம் - தொல் சிறப்பின்
செவ்வல் அம் குன்றம்போல் தோன்றும் புனல் நாடன்

தெவ்வரை அட்ட களத்து……"(களவழி.10)

மேலும் கொடிய போர்க்களத்தில் வீரர்கள் விட்டொழித்த போர்முரசம் குருதி வெள்ளத்தில் மிதந்து வர அதனை போரில் கண்ணிழந்த யானைகள் முரசை உதைக்கும் சத்தமானது மேகக் கூட்டம் "முழங்குவது போல காட்சி அளித்தது. இதனையே,

கழுமிய ஞாட்பினுள் மைந்து இகந்தார் இட்ட
ஒழி முரசம் ஒண் குருதி ஆடி - தொழில் மடிந்து
கண் காணா யானை உதைப்ப இழுமென
மங்குல் மழையின் அதிரும் அதிராப் போர்ச்
செங் கண் மால் அட்ட களத்து…"(களவழி.11)

என்னும் பாடல் புலப்படுத்துகின்றது. போர்க்களத்தில் இடைவிடாது அம்புகள் தைக்க அழகிய யானைகள் தளர்ந்து நெருப்பு நிறம் பொருந்திய இரத்தத்தை ஒழுகுதலால் சிவந்த செம்மண் மலை மீது பொழிந்த மழை செந்நீராக ஓடுவது போல காட்சி அளித்தது. இதனை பின்வரும் பாடல் எடுத்தியம்புகின்றது.

ஓவாக் கணை பாய ஒல்கி எழில் வேழம்

தீவாய்க் குருதி இழிதலால் செந்தலைப்

பூவல்அம் குன்றம் புயற்கு ஏற்ற போன்றனவே…(களவழி.12)

மேலும் யானையின் துதிக்கை வெட்டி வீழ்த்தப்பட்டதனையும் சில பாடல்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் பொய்கையார். ஒளிமிக்க நீண்ட வாளை பின்னே வாங்கி வீரர்கள் மலையைப் போன்ற யானைகளின் துதிக்கையை வெட்ட அவை மலையின் மேல் இடி விழுந்த பாம்பினை போல புரண்டது. (களவழி.13) மேலும் மற்றுமொரு பாடலில் யானைகளின் துதிக்கைகள் துண்டிக்கப்பட்டதால் அவற்றிலிருந்து கொட்டும் இரத்தமானது பைகளிலிருந்து பவளங்கள் இடைவிடாது கொட்டுவது போல தோன்றியது.இதனையே பின்வரும் பாடல் எடுத்தியம்புகின்றது.

"கவளம் கொள் யானையின் கைதுணிக்கப்பட்டுப்
பவளம் சொரிதரு பை போல் திவள் ஒளிய
ஒண் செங் குருதி உமிழும் புனல் நாடன்
கொங்கரை அட்ட களத்து….."(களவழி.14)

வீரர்கள் எறிந்த வேலானது யானையின் இரு தந்தங்களுக்கு நடுவே பாய்ந்து சென்று கடைப்பகுதி மட்டும் வெளியே தோன்றியதால் மூன்று தந்தங்கள் உடையதாக யானைகள் காட்சியளித்தன. (களவழி.19) சோழன் போர் செய்த களத்தில் இணைந்த வேல்கள் அழகிய மார்பில் அழுந்துதலால் புண்கள் மிகுதியாகி உடல் நடுங்கி பாகர்கள் துணையில்லாமல் தளர்ந்து நின்ற யானைகள் நிலையாக நிலங்களில் இடம்பெறும் மலைகள் போன்று காட்சியளித்ததாக களவழி நாற்பதில் கூறப்பட்டுள்ளது. இதனையே,

"இணை வேல் எழில் மார்வத்து இங்க புண் கூர்ந்து
கணை அலைக்கு ஒல்கிய யானை - துணை இலவாய்
தொல் வலியின் தீரா துளங்கினவாய் மெல்ல
நிலம் கால் கவவு மலை போன்ற செங் கண்
சின மால் பொருத களத்து…."(களவழி.21)


© 2025, IRJTSR

எனும் பாடல் எடுத்தியம்புகின்றது. மேலும் வீரர்களால் வெட்டப்பட்ட யானையின் துண்டுபட்ட துதிக்கைகள் தரையிலேயே வெண்கொற்றக் குடைக்கு அருகில் விழுந்து கிடக்கின்ற காட்சியானது ஒளி வீசும் நிலவை தொட்டுச் சுவைக்கும் பாம்பினை போன்று தோன்றியது என்கிறது களவழி நாற்பது. (களவழி.22) பகைவரை கொன்ற போர்க்களத்தில் பொங்கியோடும் இரத்த வெள்ளம் கொல்லப்பட்ட யானைகளின் உடல்களை இழுத்துச் செல்வதானது மலைகளோடு மலைகள் மோதுமாறு மலைகளை தூக்கி எறிந்தும் உருட்டியும் இழுத்துக் கொண்டும் ஓடும் வெள்ளம் போல காட்சியளித்தது. இதற்கு பின்வரும் வரிகள் சான்று பகர்கின்றன.

“மடங்க எறிந்து மலை உருட்டும் நீர்போல்
தடங் கொண்ட ஒண் குருதி கொல் களிறு ஈர்க்கும்
மடங்கா மற மொய்ம்பின் செங் கண் சின மால்
அடங்காரை அட்ட களத்து…..”(களவழி.30)

வீரர்கள் எறிந்த வேலினால் நெற்றிப் பிளந்து கொல்லப்பட்ட யானையின் மத்தகத்தில் கட்டப்பட்ட அழகிய பட்டமானது மேகத்தின் கண் பொலிவுற்று விளங்கும் மின்னல் கொடி போல விளங்கியது என்கிறது களவழி நாற்பது.(களவழி.31) சோழ வேந்தனின் வேல்கள் பாய்ந்ததனால் அதில் ஏறி வந்த சேர அரசனும் பட்டத்து யானையும் விழுந்த காட்சியானது சிவந்த மலைமீது இடி விழுந்ததனால் மலையோடு சிங்கமும் சிதறுண்டு கிடந்ததைப் போல காட்சி அளித்தது. இதனையே பின்வரும் பாடல் புலப்படுத்துகின்றது.

“செவ் வரைச் சென்னி அரிமானோடு அவ் வரை
ஒல்கி உருமிற்கு உடைந்தற்றால் - மல்கிக்
கரை கொன்று இழிதரும் காவிரி நாடன்
உரை சால் உடம்பிடி மூழ்க, அரசோடு
அரசுஉவா வீழ்ந்த களத்து…”(களவழி.35)

போர்க்களத்தில் வீழ்த்தப்பட்ட அரசர்களின் பிணங்களில் வடிந்த இரத்தமானது முரசுகளையும் முத்துக்களைக் கொண்ட தந்தங்களை உடைய யானைகளையும் இழுத்துச் செல்வதானது கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்படும் சிறியதும் பெரியதுமான தோணிகளைப் போல காணப்பட்டது. இதனையே,

“அரசர் பிணம் கான்ற நெய்த்தோர் முரசொடு
முத்துடைக் கோட்ட களிறு ஈர்ப்ப - எத்திசையும்
பௌவம் புணர் அம்பி போன்ற புனல் நாடன்
தெவ்வரை அட்ட களத்து…..”(களவழி.37)

என்னும் பாடல் வெளிப்படுத்துகின்றது. போர்க்களத்தில் புண்பட்ட பருத்த உடலையும் கழுத்தினையும் உடைய யானைகள் புண்கள் மிகுதியால் வலி தாங்க முடியாமல் இடி ஓசை கேட்டு தவிக்கும் பாம்புகள் போல புரண்டு துடித்தன. (களவழி.38) மேலும் போர்க்களத்தில் வெள்ளியால் செய்த வெண்கலப்பையினால் நிலத்தை உழுவது போல போரினால் இறந்த யானைகள் எல்லாம் முகம் கவிழ்ந்து தரை மேல் சாய்ந்து கிடந்தன. இதனையே பின்வரும் பாடல் எடுத்தியம்புகின்றது.

“வெள்ளி வெண் நாஞ்சிலால் ஞாலம் உடுவன போல்
எல்லாக களிறும் நிலம் சேர்ந்த – பல வேல்
பணை முழங்கு போர்த்தானைச் செங்கண் சினமால்
கணைமாரி பெய்த களத்து…..”(களவழி.40)

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR

வேல்களால் மார்பில் குத்தப்பட்டு தளர்ந்து போன யானைகள் கலக்கம் அடைந்து ஒரு பக்கக் காதுகளை நிலத்தில் படும்படியாக சாய்ந்து கிடத்தலானது நிலமகள் உபதேசிக்கும் உபதேச மொழிகளை கேட்பன போன்று காட்சி அளித்தது என்கிறது களவழி நாற்பது. இதனையே,

“வேல் நிறத்து இங்க, வயவரால் ஏறுண்டு
கால் நிலை கொள்ளாக் கலங்கி செவி சாய்த்து
மாநிலம் கூறும் மறை கேட்ப போன்றவே
பாடு ஆர் இடி முரசின் பாய்புனல் நீர்நாடன்
கூடாரை அட்ட களத்து….”(களவழி.41)

இவ்வாறாக களவழி நாற்பதில் போர்க்களக் காட்சிகளை பொய்கையார் கூறமுற்பட்டுள்ளதோடு அதனூடாக சோழ மன்னனின் யானைப்படையின் வெற்றிச் சிறப்புக்களையும் சேர மன்னனின் யானைப்படை வீழ்த்தப்பட்டு போர்க்களத்தில் கிடக்கும் காட்சியையும் நூல் முழுவதும் கூறியுள்ளார். இதன்மூலம் சோழன் செங்கணானுடைய வெற்றிச் சிறப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**முடிவுரை**

போர்க்களத்தில் எதிரிகளோடு போரிட்டு வெற்றி பெற்ற யானைகளும் விழ்ந்துபட்ட யானைகளும் பல்வேறு இயற்கைக் காட்சிகளோடு ஒப்பிட்டு தத்துரூபமான முறையில் போர்க்களக் காட்சியினை எம் கண்முன்னே கொண்டு வந்ததனை பார்க்க முடிகின்றது. அக்காலத்தில் நாற்படையிலும் யானைகள் போரில் தவிர்க்கமுவியாத போர்க்கள விலங்கினமாக இருந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் யானைகள் தமிழர்களின் போர் மரபில் தவிர்க்க முடியாதவையாக இருந்திருக்கின்றன. யானைகளின் வெற்றி சிறப்புகள் இந்நூலில் கூறப்படினும் அதிகமாக போரின் போது வீழ்த்தப்பட்டு இரத்தம் சிந்தி மாண்டு கிடக்கும் காட்சிகளைப் புலவர் நயம்பட எடுத்துரைத்துள்ளதைப் பார்க்க முடிகின்றது. மேலும் இவ் போர்க்களக் காட்சிகளை பொய்கையார் எடுத்துரைப்பதற்கு உவமை அணிகளை அதிகம் கையாண்டுள்ளதோடு உயர்வுநவிற்சி அணிகளையும் ஆங்கங்கே கையண்டுள்ளாமை சிறப்பிற் குறியது. இந்த வகையிலேயே களவழி நாற்பதில் யானைப்படையின் சிறப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**உசாத்துணைகள்**

[1] சிதம்பரநாத முதலியார்.டி.கே,(1947),“முத்தொள்ளாயிரம்”, தமிழ் பண்னை, சென்னை.
[2] கோவிந்தராசமுதலியார்.கா.ர(1913),“களவழி நாற்பது மூலமும் உரையும்”, மதராஸ்ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR